**செய்தி வெளியீடு எண்: 606** **நாள்: 01.09.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று **(1.9.2018)** சேலத்திலிருந்து கருமந்துறை செல்லும் வழியில் அருணா என்ற மலை கிராமத்தில் வசிக்கும் மலைவாழ் மக்களின் குடிசை வீட்டிற்கு நேரில் சென்று அவர்களின் வாழ்வாதாரம் குறித்து கேட்டறிந்தார்.

சேலத்திலிருந்து கருமந்துறையில் நடைபெறும் அரசு விழாவில் கலந்து கொள்வதற்காக செல்லும் வழியில், அருணா என்ற மலை கிராமத்தில் வசித்து வரும் திரு.தீர்த்தன் என்பவரின் வீட்டிற்கு திடீரென சென்று, கட்டிலில் அமர்ந்து, அக்குடும்பத்தினரை நேரில் சந்தித்து, அவர்களின் வாழ்வாதாரம் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார். இந்த மலைப் பகுதியில் என்னென்ன தானியங்கள் விளைகின்றது, விளைவிக்கப்பட்ட தானியங்களை நீங்கள் எப்படி விற்பனை செய்கிறீர்கள் என்று கனிவோடு கேட்டறிந்தார். கால்நடைகளான கறவை பசுகள், செம்மறி ஆடுகள், கோழிகள் வைத்துள்ளீர்கள், இதன்மூலம் தங்களின் பொருளாதார வாழ்க்கை வளம் பெறுவதற்கு வழிவகை உள்ளதா என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார். மேலும், மலைவாழ் மக்களின் மேம்பாட்டிற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து நடைமுறைப்படுத்தி வருகிறது என தெரிவித்தார்.

மலைவாழ் மக்கள் வளர்க்கும் பசுக்கள், ஆடுகளுக்கு தேவையான தீவனங்களை நீங்களே விளைவிக்கிறீர்களா, என்னென்ன தீவனப் பயிர்களை இந்த மலைப் பகுதியில் பயிரிட முடியும் என்பதையும், மலைப் பகுதியில் விளைவிக்கப்படும் கம்பு, ராகி, வரகு, சோளம், திணை ஆகிய உணவு வகைகளை குறித்தும் ஆர்வத்துடன் கேட்டறிந்தார்.

மலைப் பகுதியில் வசிக்கும் தங்கள் குடிசை வீட்டிற்கு நேரில் வந்து, தங்கள் வீட்டில் தண்ணீர் அருந்தி, தங்களின் வாழ்வாதாரம் குறித்து நேரில் கேட்டறிந்ததற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தங்களுடைய நன்றியையும், மகிழ்ச்சியையும் மலைவாழ் மக்கள் அன்புடன் தெரிவித்துக் கொண்டார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**
**நாள்: 1.9.2018**